2002 ஏப்ரல் 17]

145—

புற நோயாளிகளுக்குக் கட்டடம்

***5749—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவிற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான தேவையை அறிந்து நாகப்பட்டினம் இணை இயக்குநர் அவர்கள் அதற்கான முன்மொழிவை அரசுக்கு அனுப்பிவைக்கப் பணிக்கப்பட்டுள்ளார். முன்மொழிவு கிடைக்கப்பெற்றவுடன் அது குறித்து அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சிக் காலத்தில் மூன்று மருத்துவர்களுடன் செயல்பட்டு வந்த சீர்காழி அரசு மருத்துவமனைக்கு மேலும் இரண்டு மருத்துவர்களை நியமனம் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் வணங்குகிறேன். எனது சீர்காழி தொகுதியில் சீர்காழி நகரத்தில் இயங்கிவரும் அரசு மருத்துவமனை சுமார் 50 வருடங்களுக்குமுன் கட்டப்பட்ட பழமையான ஓட்டுக் கட்டடமாகும். அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்து சீர்கெட்ட நிலையில் உள்ளது. குறிப்பாக இந்த மருத்துவமனைக்கு தாலுகா முழுவதிலுமிருந்து தினமும் சுமார் 1050 புற நோயாளிகள் சிகிச்சைக்காக வருகிறார்கள். புற நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கென தனியாகக் கட்டடம் கிடையாது

இட வசதி இல்லாததால் நோயாளிகள் வெளியே வெய்யிலில் காத்திருக்கும்படியான சூழ்நிலை உள்ளது. மழைக் காலங்களில் ஓட்டுக் கட்டடம் ஒழுகும் நிலையில் மிகவும் மோசமாக உள்ளது. ஆகவே, சீர்காழி அரசு மருத்துவமனைக்கு, புறநோயாளிகள் சிகிச்சை பெற வசதியாகத் தனியாக ஒரு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன். சீர்காழி அரசு மருத்துவமனையில் தினந்தோறும் 90 உள் நோயாளிகள், ஆண்கள், பெண்கள் என இருபாலரும் அனுமதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக, பெண்கள் படுக்கையறை வசதிக் கட்டடமானது 50 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டுள்ள ஓட்டுக் கட்டடம் இடிந்துவிழும் சூழ்நிலையில் உள்ளது. அதற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கும், ஆண்களுக்கு 100 படுக்கையறை வசதியுடன் கூடிய கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கும் அரசு முன்வருமா என பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி அரசு மருத்துவமனையினுடைய கட்டடங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பழமையான கட்டடங்கள்தான். எனவே அவற்றைப் பராமரிப்பதற்காகத்தான் சென்ற ஆண்டு 2.85 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, அந்தப் பழைய கட்டடங்கள் ஓரளவுக்குப் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, சீர்காழி அரசு மருத்துவமனையில் தற்போது படுக்கைகளினுடைய எண்ணிகை 74 மட்டும்தான். ஆனால், தினந்தோறும் 95 உள்நோயாளிகள் அங்கே தங்கி, சிகிச்சை பெறுகிறார்கள். எனவே, கூடுதலாகப் படுக்கை வசதிகள் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக ஆண்கள் சிகிச்சைப் பிரிவிற்குப் படுக்கை வசதி பற்றாக்குறை இருக்கிறது. எனவே, கூடுதலாக ஆண்கள் வார்டுக்கும், புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளுக்குப் புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கான அனுமதி அளிக்கப்படும் என்று சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலே அறிவிக்கப்பட்டது. அப்படிச் செய்த அறிவிப்பிலே

2002 ஏப்ரல் 17]

என்னுடைய மன்னார்குடி தொகுதிக்குச் சுமார் 3 கோடி ரூபாய் செலவிலே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 146, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

146—

ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்

***9975—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடமதுரை ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சிந்தனையில் உதித்த உன்னதத் திட்டமான ஒன்றிய அளவில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதை 30 படுக்கைகள் வசதி, ஆப்பரேஷன் தியேட்டர், எக்ஸ்ரே வசதி, ஆம்புலன்ஸ் வசதி, கூடுதலாக இரண்டு சிறப்பு டாக்டர்கள் போன்ற வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டத்தின்கீழ் பழனி சுகாதார மாவட்டம், வட மதுரை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வட மதுரை ஆரம்ப சுகாதார நிலையமும் இடம்பெற்றிருக்கிறது. வரும் ஆண்டில் அது தரம் உயர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் எனது தொகுதி வடமதுரை ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையத்தை மேன்மைப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி